"இனிமையான குழந்தைகளே! நீங்கள் 100 சதவீதம் அனைத்து குணங்களிலும் நிறைந்தவர்களாக ஆக வேண்டும், நாம் எதுவரை தூய்மையாகி இருக்கிறோம், என்று உள்ளம் எனும் கண்ணாடியில் பார்க்க வேண்டும்"

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் எந்தவொரு உற்சவத்தை தினமும் கொண்டாடுகிறீர்கள், மேலும் மனிதர்கள் எந்தவொரு உற்சவத்தை கொண்டாடுகிறார்கள்?

பதில்: நீங்கள் தெய்வீக தர்மத்தின் ஸ்தாபனை அதாவது பாரதத்தை சொர்க்கமாக்குவதற்கான உற்சவத்தை தினமும் கொண்டாடுகிறீர்கள். நீங்கள் தினமும் மனிதனை தேவதையாக்கும் நாற்று நட வேண்டும். அந்த மனிதர்களோ காட்டு முட்களின் நாற்று நடுகிறார்கள். மேலும் வனவிழா என்று பெயரிடுகிறார்கள். நீங்கள் முட்களை மலராக்கும் உற்சவத்தை தினமும் கொண்டாடுகிறீர்கள். உங்களுடையதைப் போன்று உற்சவத்தை வேறு யாரும் கொண்டாட முடியாது.

பாடல்: முகத்தை மனம் எனும் கண்ணாடியில் பாருங்கள் . . . . . . . . .

ஓம் சாந்தி. இதை யார் சொன்னது? இங்கே நடப்பதோ தந்தை மற்றும் குழந்தைகளின் நேரடி சந்திப்பாகும். குழந்தைகளுக்கு இப்போது தெய்வீகப் பார்வை, ஞானத்தின் மூன்றாவது கண் கிடைத் திருக்கிறது -- பார்ப்பதற்காக. ஏனென்றால் அனைவரும் தூய்மையற்ற அல்லது பாவ ஆத்மாக்களாக தான் இருந்தீர்கள். தூய்மையற்றவர்களை தூய்மையாக்குவதற்காக பாபா ஸ்ரீமத் கொடுக்கின்றார். இந்த ஸ்ரீமத்தை கொடுப்பது யாரோ அவரையும் கூட புரிந்து கொள்ள வேண்டும். அவர்தான் ஆத்மாக் களிடம் பேசுகின்றார். நான் இந்த சரீரத்தின் மூலம் நல்ல கர்மம் செய்திருக்கிறேனா அல்லது கெட்ட கர்மம் செய்திருக்கிறேனா, என்பது ஆத்மாவிற்குத் தெரியும். பாபா குழந்தைகளாகிய உங்களுக்கு அறிவைக் கொடுக்கின்றார். அனைவரும் கண்டிப்பாக தூய்மையற்றவர்களாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் பாருங்கள், நாம் எதுவரை தூய்மையாகி இருக்கிறோம், மேலும் தெய்வீக குணத்தைத் தாரணை செய்திருக்கிறோமா? தெய்வீக குணத்தைத் தாரணை செய்விப்பவர் சர்வ குணங்களிலும் கடலான பாபா ஆவார், அவர் அமர்ந்து புரிய வைக்கின்றார். மனிதர்கள் பாடுகிறார்கள், நாங்கள் குணமற்றவர்கள், எங்களிடத்தில் எந்த குணமும் இல்லை. எங்களிடத்தில் குணம் இல்லை என்று அவர்களே சொல்கிறார்கள். இப்போது குழந்தைகளாகிய நீங்கள் 100 சதவீதம் அனைத்து குணங்களும் நிறைந்தவர்களாக ஆக வேண்டும். தன்னுடைய மனம் எனும் கண்ணாடியில் பாருங்கள், என்று சொல்கிறார். சர்வகுணங்களும் நிறைந்தவர் களாக ஆனால் தான் நீங்கள் ஸ்ரீ லஷ்மி அல்லது ஸ்ரீ நாராயணனை மணம் முடிக்க முடியும். முதல்-முதலில் பாபாவின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். நீங்கள் தான் தாயும் தந்தையும்.......... என்று யாரை பாடுகிறார்களோ, அப்படிப்பட்ட எல்லை யற்ற தந்தை, அந்த பரமபிதாவிற்குத் தான் அதிக மகிமையாகும். சிவாய நமக, என்று கூறுகிறார்கள், அவரோ சொர்க்கத்தைப் படைப்பவராக இருக்கின்றார். கண்டிப்பாக நமக்கு பாபாவிடமிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தியை அடைவதற்கு உரிமை இருக்கிறது. எல்லையற்ற தந்தையின் ஆஸ்தி சொர்க்கத்தின் இராஜ்யமாகும், அதை நமக்கு கொடுக்கின்றார். பாரதத்தில் சொர்க்கத்தின் இராஜ்யம் இருந்தது, இப்போது

இல்லை. கண்டிப்பாக பாபாவிடமிருந்து தான் கிடைத்திருந்தது. பாரதம் தான் உண்மையான கண்டமாக ஆகிறது. உண்மையான சிவபாபாவின் பிறந்த பூமி இதுவாகும் -- இதை யாரும் தெரிந்திருக்கவில்லை. சிவராத்திரி பாடப்படுகிறதே, அது என்ன? கிருஷ்ணருக்கும் ராத்திரி, சிவனுக்கும் கூட ராத்திரி காட்டுகிறார்கள். கிருஷ்ணருக்கு தாயின் கர்பத்தின் மூலம் பிறவி ஏற்பட்டது. சிவபாபாவிற்கு உண்மையில் ஜன்மாஷ்டமி, என்று சொல்ல முடியாது. பிரம்மாவிற்கு எப்போது இரவாக ஆகிறதோ, அப்போது தான் சிவபாபா வருகின்றார். இரவிற்குப் பிறகு பகல் அதாவது கலியுகத்தின் இறுதி மற்றும் சத்யுகத்தின் ஆரம்பம் ஆகிறது. இதனை காரிருள் இரவு, என்று சொல்லப்படுகிறது. இது எல்லையற்ற விஷய மாகி விட்டது. எல்லைக்குட்பட்ட இரவு என்னவோ ஏற்படத்தான் செய்கிறது, ஆனால் கலியுகத்தின் கடைசியை காரிருள், என்று சொல்லப்படுகிறது. ஞான மை சத்குரு கொடுத்தார் .......... சத்குரு என்று, ஞான சூரியன் பாபாவைத் தான் சொல்ல முடியும். முதல்-முதலில் பாபா மற்றும் ஆஸ்தியைப் பற்றிய அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். யாராவது ஒரு இராஜாவுக்கு குழந்தை இல்லை என்றால், ஏதோ ஒரு ஏழை குழந்தையையாவது தத்தெடுக்கிறார் என்றால், நான் முன்பு ஏழையாக இருந்தேன் இப்போது இராஜாவின் குழந்தை என்று அந்த குழந்தைக்குத் தெரியும் அல்லவா? நாம் இராவணனுடையவர்களாக ஆனதின் காரணத்தால் மிகவும் ஏழைகளாக, எதுவும் இல்லாதவர்களாக ஆகிவிட்டிருந்தோம் என்பதையும் குழந்தைகளாகிய நீங்கள் இப்போது தெரிந்துள்ளீர்கள். இப்போது நாம் எல்லையற்ற தந்தையினுடையவர்களாக ஆகியிருக் கிறோம். அவரிடமிருந்து நமக்கு சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறது. இதை நல்ல விதத்தில் அறிமுகம் கொடுக்க வேண்டும் மேலும் நமக்கு எல்லையற்ற தந்தையிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தி கிடைக்கிறது, என்று எழுதி வாங்க வேண்டும். இந்த ஞானத்தை வேறு யாரும் கொடுக்க முடியாது. சன்னியாசிகள் என்னவோ வீடு வாசலை விட்டு விடுகிறார்கள். அவர்கள் அம்மா, அப்பா, சித்தப்பா, மாமா போன்று சொல்வதிலிருந்து விடுபட்டு விடுகிறார்கள், முடிந்தது. இங்கேயோ இல்லற தர்மத்தின் விஷயமாகும். அவர்கள் இல்லற தர்மத்தை தியாகம் செய்கிறார்கள்.

நீங்கள் தான் தேவி-தேவதைகளாக இல்லற தர்மத்தில் இருந்தீர்கள், சர்வகுணங்களும் நிறைந்தவர் களாக, முழுமையாக விகாரமற்றவர்களாக இருந்தீர்கள். மேலும் நீங்கள் சொர்க்கத்திற்கு எஜமானர் களாக இருந்தீர்கள், என்று குழந்தைகளாகிய உங்களுக்கு பாபா தாமே புரிய வைக்கின்றார். பிறகு பூஜிக்கத்தக்க நிலையிலிருந்து நீங்கள் பூஜாரியாக ஆகி தங்களுடைய பூஜையையும் செய்கிறீர்கள். எப்போது நீங்கள் பூஜிக்கதக்க தேவி-தேவதைகளாக இருக்கிறீர்களோ அப்போது நீங்கள் அங்கே பூஜை செய்வதற்கான அவசியம் இல்லை. அதேபோல் தான் பாரதம் தேவி-தேவதைகளின் பூஜிக்கதக்க வர்களின் குலமாக இருந்தது. இப்போது பூஜிக்க தக்க நிலை யிலிருந்து பூஜாரி ஆகியுள்ளீர்கள். பிறகு குழந்தைகளாகிய நீங்கள் பூஜாரி நிலையிலிருந்து பூஜிக்கத் தக்க தேவி-தேவதைகளாக ஆக வேண்டும். ஆகையினால் தான் நீங்களே பூஜிக்கத்தக்கவர்கள், நீங்களே பூஜாரிகள் என்று பாடப்படு கிறது. பாபா பூஜிக்கத்தக்கவராகவோ மற்றும் பூஜாரியாகவோ ஆவதில்லை. பாபா எப்போதுமே பூஜிக்கத்தக்கவராகத் தான் இருக்கிறார். பக்தி மார்க்கத்தில் பிராமண மக்கள் கோவிலில் சிவலிங்கத்தை

வைக்கிறார் கள் பிறகு அமர்ந்து பாபாவிற்குப் பூஜை செய்கிறார்கள். நாம் அவருடைய குழந்தைகளாவோம். ஹே பரமபிதா பரமாத்மாவே, என்று சொல்வார்கள் அல்லவா? அவரோ நிராகார மானவராக இருக்கின்றார், ஆத்மாவும் கூட நிராகாரமாக இருக்கிறது. சிவனிடம் செல்லும் போது பரமபிதா பரமாத்மா சிவன், என்று சொல்கிறார்கள். இதை ஆத்மா இந்த கர்மேந்திரியங்களின் மூலமாகச் சொன்னது. யார் நல்ல கர்மங்கள் செய்து விட்டுச் செல்கிறார்களோ அவர்களுக்கு மகிமை செய்யப்படுகிறது, என்பதையும் குழந்தைகளாகிய நீங்கள் இப்போது தெரிந்து கொண்டீர்கள். இப்போது நீங்கள் தாய்-தந்தை என்று அந்த நிராகாரமானவரைத் தான் சொல்கின்றீர்கள். உங்களுடைய சகஜ இராஜயோகம் மற்றும் ஞானத்தின் படிப்பினை மூலம் நாங்கள் அதிக சுகத்தினை அடைவோம். அதற்காக நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு சகஜமான விஷயமாக இருக்கிறது. நீங்கள் பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள், பிரம்மா குமார, குமாரிகளாக நடை முறையில் இருக்கின்றீர்கள், முன்னால் அமர்ந்துள்ளீர்கள். சிவபாபா மற்றும் பிரம்மா பாபா இருவருக்கு முன்னாலும் இருக்கின்றீர்கள். சிவபாபாவிற்கு தன்னுடைய சரீரம் இல்லை. சிவபாபா இவருடைய வாயின் மூலம் இராஜயோகம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக் கிறார், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். தேகம் உட்பட தேகத்தின் அனைத்து சம்மந்தங்களையும் மறந்து விடுங்கள், தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள், என்று கிருஷ்ணர் எப்படிச் சொல்வார்? அவர் சிறிய குழந்தையாக இருக்கிறார். இதை கிருஷ்ணர் சொல்ல முடியாது. இதை பாபா தான் சொல்ல முடியும். ஆக இது பெரிய தவறாக ஆகிவிட்டது அல்லவா? லஷ்மி-நாராயணனில் இருந்து இராஜா-ராணி எப்படியோ அப்படி பிரஜைகள் அனைவருக்கும் சுகம் கிடைத்தது. அவர்கள் அனைவரும் தான் 84 பிறவிகள் எடுத்து தமோபிரதானம் ஆகியிருக்கிறார்கள். முக்கியமானவர்கள் லஷ்மி-நாராயணன் அல்லவா? எப்படி இராஜா-இராணியோ அப்படி பிரஜைகளும் ஆவர். இப்போது பிறகு நீங்கள் வந்து சூத்திரனிலிருந்து பிராமணர்களாக ஆகியுள்ளீர்கள். இது உங்களுடைய லீப் (சங்கமயுக) பிறவியாகும். புருஷோத்தம மாதத்தை (மார்கழி) லீப் என்று சொல்லப்படுகிறது. இது நம்முடைய ஈஸ்வரிய பிறவி, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள்.

நாளுக்கு-நாள் பாபா புதிய-புதிய பாயிண்டுகளைப் புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். எதுவரை வாழ்கிறோமோ, அந்தக் கடைசி வரை நீங்கள் படிக்க வேண்டும். பாயிண்டுகள் வந்து கொண்டே இருக்கும், சேர்ந்து கொண்டே இருக்கும். ஞான யக்ஞும் கூட கடைசி வரை நடக்க வேண்டும். ருத்ர யக்ஞும் உருவாக்கு கிறார்கள், மண்ணினால் சாலிகிராமம் செய்து அதற்கு அமர்ந்து பூஜை செய் கிறார்கள். ஆத்மாவிற்கு பூஜை நடக்கிறது. ஜீவாத்மாக்களாகிய நீங்கள் தான் பாரதத்தை தலைக் கிரீடமாக மாற்றினீர்கள், எனும்போது ஆத்மாக் களுக்கு பூஜை செய்கிறார்கள். பரமபிதா பரமாத்மா தந்தையோடு நீங்கள் கூட சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள் எனும்போது சிவலிங்கத்தின் கூடவே சாலிகிராமங்களையும் உருவாக்குகிறார்கள். ஆக முதல்-முதலில் முக்கியமாக பாபாவின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். சிவபாபா பிறவி எடுத்தார், ஆனால் தாயின் கர்பத்திலா பிறவி எடுக்கிறார். அவரோ நிராகாரமானவராக இருக்கின்றார்.

யாராவது சரீரத்தை விட்டுவிட்டார்கள் என்றால், பக்தியோடு செய்யப்பட்டவைகளை சாப்பிடுவதற்கு அவருடைய ஆத்மாவை அழைக்கிறார்கள். எனவே ஆத்மாக்களுக்குப் படைக்கிறார்கள் அல்லவா? ஆத்மா தான் சுவையை எடுக்கிறது. கசப்பு, இனிப்பு, துக்கம்-சுகம் இவை ஆத்மாவிற்குத் தான் தெரிய வருகிறது. ஆத்மாவில் தான் சம்ஸ்காரம் இருக்கிறது. ஆத்மாவிற்கு சுகம் அல்லது துக்கம் என்பது சரீரத்தில் இருக்கும் போது தான் தெரிய வருகிறது. தண்டனை எப்படி கிடைக்கிறது என்று பாபா புரிய வைத்திருக்கின்றார். சூட்சும சரீரம் கூட இல்லை, ஸ்தூல சரீரத்தை தாரணை செய்வித்து பிறகு தண்டனை கொடுக்கிறார். கர்ப்ப ஜெயிலில் தண்டனை அனுபவிக்கிறார்கள். ஐயோ-ஐயோ என்கிறார்கள். போதும், என்னை வெளியேற்றுங்கள். கர்ப்பமாளிகையின் உதாரணம் கூட கொடுக்கப் பட்டுள்ளது. வெளியே வர விரும்பியதில்லை. இது உதாரணம் ஆகும். சத்யுகத்தில் கர்ப்பம் கூட மாளிகையாகி விடுகிறது. அங்கே எந்த பாவமும் ஏற்படுவதில்லை.

எப்படி தூய்மையற்றவர்களாக ஆனோம், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். அஜாமிலன் போன்று தூய்மையற்றவர்கள், என்று பெயரே இருக்கிறது. நிறைய பாவம் செய்கிறார்கள். தூய்மை என்றால் விகாரமே இல்லாதவர்கள். முக்கியமான விஷயம் காம விகாரமே ஆகும். ஆகையினால் தான் தூய்மை யாவதற்காக சன்னியாசிகள் வீடு வாசலை விட்டு விடுகிறார்கள், அப்படி விடும்போது அவர்களை மகாத்மா, என்று சொல்கிறார்கள். மனிதர்கள் அனைவரும் தூய்மையற்றவர்களாக இருக்கிறார்கள், ஆகையினால் தான் பதீத-பாவன சீதாராம், ரகுபதி ராகவ ராஜாராம்.......... என்று பாடு கிறார்கள். ராஜாராம் என்று சிவபாபாவை சொல்ல முடியாது. இராம் என்று பரமபிதா பரமாத்மாவை சொல்லப்படுகிறது. ராஜா இராம் என்பது கிடையாது. நான் ராஜா-மகாராஜா ஆவதில்லை. ஸ்ரீ லக்ஷ்மி மகாராணி, நாராயணன் மகாராஜாவாக நீங்கள் ஆகின்றீர்கள், நான் அல்ல. நானோ நிராகாரமானவன் மறுபிறவி இல்லாதவனாக இருக்கின்றேன். சரீரமுடையவர்கள் யாரெல்லாம் இருக்கிறார்களோ, அவர்கள் அனைவரும் மறுபிறவி எடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். நான் நிராகாரமானவனாக இருக்கின்றேன், என்று பாபா கூறுகின்றார். நானும் கூட இயற்கையின் ஆதாரம் எடுக்க வேண்டி யுள்ளது. நான் கர்ப்பத்தில் பிரவேசம் ஆவதில்லை, நான் இவருக்குள் (பிரம்மா) பிரவேசம் ஆகின்றேன். இவர் தன்னுடைய பிறவிகளைத் தெரிந்திருக்கவில்லை.

நீங்கள் தேவி-தேவதைகளாக இருந்தீர்கள், பிறகு சூத்திரர்களாக ஆனீர்கள், இப்போது நீங்கள் பிராமணர்களாக ஆகியுள்ளீர்கள், என்று பாபா அமர்ந்து புரிய வைக்கின்றார். நான் உங்களுக்குப் புரிய வைக்கின்றேன். நீங்கள் உங்களுடைய பிறவிகளை தெரிந்திருக்கவில்லை. யார் பிராமணர்களோ, அவர்கள் தான் வந்து புரிந்து கொள்வார்கள். இந்த விதமாக நீங்கள் 84 பிறவிகள் முடித்திருக்கிறீர்கள், என்று பாபா கூறுகின்றார். 21 வம்சத்திற்கான ஆஸ்தி என்று சொல்லப்படுகிறது. எல்லைக்கு அப்பாற் பட்ட தந்தை, எல்லைக்கு அப்பாற்பட்ட சுகத்தின் ஆஸ்தியைக் கொடுப்பார் அல்லவா? லௌகீக தந்தையிடமிருந்து அல்பகாலத்திற்கான சுகம் கிடைக்கிறது. அமரலோகத்தில் முதல்-இடை-கடைசி யில் சுகம் இருக்கிறது. இங்கே முதல்-இடை-கடைசியில் துக்கம் இருக்கிறது. பார்வதிகளான உங்களுக்கு அமர்நாத் சிவபாபா அமரகதை சொல்கின்றார். சத்யநாராயணின் கதை கூட அவர் சொல்கிறார். ஞானத்தின்

மூன்றாவது கண் கொடுப்பதற்கான கதை கூட இருக்கிறது. பாரதவாசிகள் எப்போதும் சுகமாக இருந்தார்கள், மிகவும் தூய்மையாக இருந்தார்கள். தூய்மை, ஆரோக்கியம், செல்வம் இருந்தது. ஒருபோதும் யாரும் ஆரோக்கியமற்று இருந்ததில்லை. பெயரே சொர்க்கமாகும். பாரதம் பழமையான சொர்க்கமாக இருந்தது மேலும் எந்த தர்மத்தின் பிரிவு போன்றவை எதுவும் அங்கே இருந்ததில்லை. மரத்தின் தண்டு இருக்கும் அல்லவா? தண்டில் யார் இருந்தார்கள்? தேவி-தேவதைகளின் சித்திரம் இருக்கிறது. அது அஸ்திவாரமாக இருந்தது. ஆனால் தங்களை தேவி-தேவதா தர்மத்தை சேர்ந்தவர்கள், என்று சொல்வதில்லை. இப்போது அவர்களின் இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக்கொண்டிருக்கிறது. நீங்கள் சத்யுகத்தின், ராதா கிருஷ்ணனுக்கு ஜோடியாக ஆக முடியும். நீங்கள் உண்மையிலும்-உண்மையாக சொர்க்கத்தின் இளவரசனாக எப்படி ஆக முடியும், என்று வந்தீர்கள் என்றால் உங்களுக்குப் புரிய வைப்போம். இந்த சமயத்தில் அனைவரும் தூய்மை யற்றவர்களாக இருக்கிறார்கள், எந்தவொரு யுக்தியின் மூலமாகவும் எழுதலாம். அனைத்து தர்மங்களும் ஒன்றாகி விட வேண்டும், என்று கூறுகிறார்கள், ஆனால் இது எப்படி நடக்க முடியும்? சத்யுகத்தில் தான் ஒரு தர்மம் இருந்தது, ஒரு வழி, ஒரு பாஷை இருந்தது. கைகள் தட்டப்படவில்லை. (பிரிவினை சண்டை சச்சரவு) உலகத்திற்கு எஜமானர்களாக இருந்தார்கள், மேலும் எந்த தர்மமும் இருக்கவில்லை. அவர்கள் எப்படி ஆனார்கள், பிறகு மற்ற தர்மங்கள் எப்படி வந்தது -- என்று யாரும் புத்திமூலமாக தெரிந்துகொள்ளவில்லை. எப்போது முற்றிலும் தூய்மையற்றவர்களாக ஆகிவிடு கிறார்களோ, அப்போது தான் தூய்மையற்றவர்களை தூய்மையாக்கும் பாபா வருகிறார் மற்ற தர்மங்களின் தூய்மையான ஆத்மாக்கள் மேலிருந்து வருகின்றார்கள். முதலில் தர்ம ஸ்தாபகர்கள் அவர்களே வருகிறார்கள் பிறகு தங்களுக்குப் பின்னால் மற்றவர்களையும் வாருங்கள் என்று அழைக் கிறார்கள். அவர்களும் சதோ, ரஜோ, தமோவில் வர வேண்டும். யாரெல்லாம் வருகிறார்களோ, அனைவரும் சதோ, ரஜோவிலிருந்து பிறகு தமோ ஆகத்தான் வேண்டும். ஆனால் இப்போது நீங்கள் தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாக ஆகின்றீர்கள். இறைதந்தையே வாருங்கள், வந்து எங்களை சொர்க்கத்திற்குக் கொண்டு செல்லுங்கள், என்று அனைவரும் அழைக்கிறார்கள். அவர்களில் சிலர் சொர்க்கத்தை முக்தியையும், சிலர் ஜீவன் முக்தியையும் புரிந்து கொள்கிறார்கள். சொர்க்கத்தைத் தான் ஜீவன்முக்தி என்று சொல்லப்படுகிறது, என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். உங்களுடைய நாற்று நடப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் காட்டு முட்களின் நாற்று நட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரவு-பகலுக்குண்டான வித்தியாசம் இருக்கிறது. அதனுடைய உற்சவம் கூட கொண்டாடுகிறார்கள். வனோற்சவம், மரத்தை முளைக்க வைப்பதற்கான உற்சவம் கொண்டாடு கிறார்கள். நீங்கள் தெய்வீக தர்மத்தின் ஸ்தாபனை அதாவது பாரதத்தை சொர்க்கமாக மாற்றுவதற் கான உற்சவத்தைக் கொண்டாடுகிறீர்கள். தினமும் மனிதனிலிருந்து தேவதையாக மாற்றுவதற்கான முயற்சி செய்கிறீர்கள். முட்களிலிருந்து மலராக மாற்றுவது என்பது உங்களுடைய ஒவ்வொரு நாளினுடைய உற்சவமாக இருக்கிறது. தோட்டக்காரன் கண்டிப்பாக அவ்வளவு பரிசும் கொடுப்பார்.

குழந்தைகள் பாட்டைக் கேட்டீர்கள் -- ஹே ஆத்மாக்களே! தன்னுடைய மனம் எனும் கண்ணாடி யில் பாருங்கள் -- நீங்கள் சொர்க்கத்தின் தேவி-தேவதைகளாக

ஆக அல்லது லஷ்மியை மணம் முடிக்க தகுதியானவர் களாக ஆகியுள்ளீர்களா? எந்த அவகுணமும் இல்லையா? புயலும் நிறைய வரும். மாயை யாரையும் விடுவ தில்லை. பெரிய-பெரிய தீபங்களையும் விடுவதில்லை அணைத்து விடுகிறது. தலைகீழான எண்ணங்கள் நன்றாக சண்டையிடும். உறுதியாக இருக்க வேண்டும். இதில் வாடிப்போவதற்கான விஷயம் இல்லை. பாபாவிடமிருந்து யோகத்தைத் துண்டிக்கக் கூடாது. அனைவருக்கும் படகோட்டி அந்த தந்தையாவார். விஷ வைத்தர்ணீய நதி பெரிய வளைகுடாவாகும். அதனை நீங்கள் யோகபலத்தின் மூலம் கடக்கின்றீர்கள். விஷக்கடலிலிருந்து நீங்கள் கடந்து பாற் கடலுக்கு சென்று விடுவீர்கள். விஷ்ணுவின் இராஜ்யம் பாற்கடலில் இருக்கிறது அதாவது நெய் ஆறு ஓடுகிறது. இங்கேயோ அழுக்கான, ரத்த ஆறுகள் ஓடுகின்றன.

சிவபாபாவின் ஸ்ரீமத்தின் மூலம் நாம் சிவாலயத்திற்குச் சென்று கொண்டிருக்கிறோம், அங்கே நாம் சுகமாக இருப்போம், என்பதை குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். நீங்கள் எப்போதும் சுகமுடையவர்களாக இருந்தீர்கள், மாயை உங்களை துக்கமுடையவர்களாக மாற்றிவிட்டது. குடும்ப விவகாரங்களை அதர்மமாக ஆக்கிவிட்டது. அங்கே இல்லற விவகாரம் தர்மமுடையதாக இருந்தது. இப்போது பாபா உங்களை உயர்ந்தவர் களாக தெய்வீக இல்லற தர்மத்தவர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார். முதல்-முதலில் முக்கியமானது பாபாவின் அறிமுகமாகும். நீங்கள் பாபா வினுடையவர்களாக ஆவதின் மூலம் சொர்க்கத்தின் எஜமானர்களாக ஆக முடியும். இது துக்கதாமமாக இருக்கிறது. நீங்கள் சொர்க்கத்திற்கு முக்திதாமம் வழியாக செல்கின்றீர்கள், ஆகையினால் சிவபுரி, விஷ்ணுபுரியை நினைவு செய்யுங்கள். நினைவு செய்து-செய்து கடைசி நேரத்தில் புத்தியில் என்ன இருக்கிறதோ அது போல் நிலையானது ஆகிவிடும். நம்முடைய 84 பிறவிகள் முடிந்திருக்கிறது, என்பதை நினைவில் வையுங்கள். பிறகு நாம் நாளை வந்து இராஜ்யம் செய்வோம், மனம் எனும் கண்ணாடியில் தன்னுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டே இருங்கள், எந்தவொரு அவகுணமும் நம்மிடம் இல்லையே? "நல்லது!

இனிமையிலும்-இனிமையான காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக்குழந்தைகளுக்கு, தாயும்-தந்தையுமான பாப்-தாதாவின் அன்பு-நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) யோகபலத்தின் மூலம் விஷ வைதர்ணீய பெரிய விரிகுடாவைக் கடக்க வேண்டும். தலைகீழான எண்ணங்களில் தளரக்கூடாது. உறுதியாக இருக்க வேண்டும்.

(2) பூஜைக்குரியவர்களாக ஆவதற்கு பாபாவுடன் பாரதத்தை தலைகிரீடமாக மாற்றும் சேவை செய்ய வேண்டும்.

வரதானம் : டிரஸ்டி (நம்பகமானவர்) ஆகி லௌகீக பொறுப்புகளை கவனித்துக் கொண்டு களைப்பற்றவராக இருக்கக்கூடிய டபுள் லைட் ஆகுக

லௌகீகக் பொறுப்புகளையும் கவனித்துக் கொண்டு சேவையின் பொறுப்பைக் கூட கவனிப்பது இவர்களுக்க டபுள் லாபம்

கிடைக்கின்றது. டபுள் பொறுப்பாளர் என்றால் டபுள் பிராப்தி. ஆனால் டபுள் பொருப்பாளர் ஆக இருந்தாலும் கூட டபுள் லைட்டாக இருப்பதற்கு சுயம் தன்னை டிரஸ்டி என புரிந்துக் கொண்டு பொறுப்புகளை கவனித்தால் சோர்வு (களைப்பு) என்ற அனுபவம் ஏற்படாது. எனது லௌகீகர், எனது குடும்பம் என புரிந்துக் கொண்டீர்கள் என்றால் சுமையின் அனுபவம் ஏற்படும். தன்னுடையது எதுவும் இலலை என்ற போது சுமைக்கான விஷயமே கிடையாது.

சுலோகன்: எப்போதும் ஞான சூரியனின் அருகில்இருந்தீர்கள் என்றால்

பாக்கயம் எனற நிழல் உங்கள் கூடவே இருந்துக் கொண்டிருக்கும்.